# ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வு கல்முனை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் நடைபெறும் உள்ளக மேற்பார்வையின் விளைதிறனை மேம்படுத்தும் நோக்கில் இடம்பெற்றது.இவ் ஆய்வு கல்முனை வலயத்தில் கல்முனைக்கோட்டப் பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் உள்ளக மேற்பார்வையில் ஈடுபடும் மேற்பார்வைக் குழுவினரின் விளைதிறனை மேம்படுத்தும் வகையில் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவினைக் கொண்ட பாடசாலைகளை மையமாகக் கொண்டதாகும். இவ்வாய்வில் மேற்பார்வைக் குழுவினராகக் கருதப்படும் எட்டு அதிபர்கள், பதினொன்று பிரதி அதிபர்கள், பதினாறு உதவி அதிபர்கள், எட்டு பகுதித் தலைவர்கள், என்பது சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களுமாக சேவைக்கால ஆலோசகர்கள் ஐந்து பேருமாக நூற்று இருபத்தெட்டு பேர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இவர்கள் படையாக்க மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

பாடசாலைகளின் உள்ளக மேற்பார்வையை மேம்படுத்துகையில் பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்திய போதிலும் குறித்த சிரேஷ்ட இடைநிலைப் பிரிவுகளில் இடம்பெறும் உள்ளக மதிப்பீட்டின் தன்மைகளை இனங்கண்டு அதன் விளைவுகளை கண்டறிந்து அதன் மூலம் எவ்வகையான ஏற்பாடுகளை இச்செயன்முறையில் ஏற்படுத்த முடியும் என்ற வகையில் அதிபர், மேற்பார்வைக் குழுவினர், சிரேஷ்ட இடைநிலை ஆசிரியர்கள் சேவைக்கால ஆலோசகர் ஆகியோரில் தாக்கம் செலுத்தும் காரணிகள் மட்டுமே இவ்வாய்வில் இணைத்துக் கொள்ளப்பட்டன.

மேலும் தெரிவு செய்யப்பட்ட மாறிகள் தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்காக அதிபர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு ஆசிரியர்கள், சேவைக்கால ஆலோசகர்கள் ஆகியோருக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு அவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் யாவும் எளிய நூற்றுவீத முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

ஆய்விலிருந்து பெறப்பட்ட முடிவுகளிலிருந்து விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில் மனிதவளப் பகிர்வு அதிபரால் பொருத்தமாக முகாமைத்துவம் செய்யப்படவேண்டும் வேண்டும். பொறுப்புக்களை பொருத்தமானவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும் உள்ளக மேற்பார்வையின் போது ஆசிரியர்களின் பலவீனங்கள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுவதன் மூலமும் வாண்மை விருத்திச் செயற்பாடுகளின் அவசியத்தை வலியுறுத்துவதன் மூலமும் அதிபர் சிறந்த கண்காணிப்பை மேற்பார்வைக் குழுவினரிடம் வலியுறுத்துவதன் மூலமும் உள்ளக மேற்பார்வையின் விளைதிறனை மேம்படுத்த முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். அதிபர் ஓர் அறிவுறுத்தல் தலைவராக செயற்பட வேண்டும். கலைத்திட்டத்தை பாடசாலயில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி மாணவர் அடைவு

மட்டத்தை உயர்த்தும் அதிபரின் பணி வெற்றியளிக்க வேண்டுமானால் பொருத்தமான ஒழுங்குமுறையில் தொடர்ச்சியாக பாடசாலைகளில் உள்ளக மதிப்பீடு நடைபெற வேண்டும்.

எனவே, பாடசாலைகளில் உள்ளக மேற்பார்வையின் விளைதிறனை அதிகரிக்க பல்வகையான உக்திகளை கையாள வேண்டியுள்ளது.

ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளை ஏனைய ஆய்வாளர்களின் ஆய்வுகளுடன் ஒப்பிடப்பட்டு உள்ளக மேற்பார்வையின் விளைதிறனை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை பாடசாலை முகாமைத்துவக் குழுவினர்களுக்கு கருத்து வழங்கும் நோக்குடன் வலய, கோட்டமட்ட அதிகாரிகளின் ஆலோசனைகளையும் பெற்று சிறந்த வழிகாட்டல்களை மேற்பார்வைக் குழுவினருக்கு வழங்குவதன் மூலம் தொடர்ச்சியான உள்ளக மேற்பார்வையை நடைமுறைப்படுத்த முடியும். இதன் மூலம் பாடசாலைகளில் அடைவுகளை அதிகரிக்க முடியும். கற்றல் கற்பித்தல் சிறப்படையும் என்ற ரீதியில் ஆலோசனைகளும் விதந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## Abstract

This research is conducted to promote the consequence of the internal supervision in school of Kalmunai educational zone. This study is based on senior secondary section schools in order to promote the outcome of the supervisory team who, engage on the internal supervision at senior secondary section of divisional schools in Kalmunai zone. One hundred and twenty-eight persons comprising eight principals eleven deputy principals, sixteen assistant principals, eight sectional heads, five in-service advisers and eighty teachers of senior secondary sections as supervisory teams were selected.

Thought, there are several factors influencing in improving internal evaluation in schools, in the senior secondary sections, internal evaluation policy and effects are found. In this process, what arrangement have to be incurred in order to improve the evaluation processes and identifying the influencing factors on principals, supervisors, senior teachers and in-service advisors are considered due to the time was limited in this study.

Further, to collect the data of the selected variables, the questionnaires were given to the principals deputy principals, assistant principals, sectional heads, senior secondary teachers and in-service advisors. All the collected data were changed as quantitative data and analyzed to calculate in simple percentage method here with the finding were calculated by statistical methodology. Also selected random sampling method was used to select the samples as they were represented in the population.

Further, the idea to enhance the progress of the results were put forward the internal evaluation supervisors, management committee of the school. The zonal, divisional authorities had promoted the best quittance and counseling in the supervisors, further, the continual internal supervising can be implemented in these schools for the progressive schools. Achievements and outputs and also the learning and teaching process will bring the best performances for that advises and suggestions have been proposed.